# இந்திய உயர்ஸ்தானிகராலயம்
# கொழும்பு
# <u>ஊடக அறிக்கை</u>

சிலோன் பெருந் தோட்ட தொழிலாளர்கள் கல்வி நிதியத்தினால் **Ceylon Estate Workers' Education Trust (CEWET)** பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு என க.பொ.த உயர்தரம் மற்றும் பட்டக் கற்கைகள். இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளில் தொழில்சார் கற்கை நெறிகளைக் கற்பதற்கான புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

25 வயதிற்குட்பட்ட க.பொ.த உயர்தரம் அல்லது க.பொ.த சாதாரணதரத்தில் (குறைந்தது 6 பாடங்கள் திறமைச் சித்தி) சித்தியடைந்த மாணவர்கள் இப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர். விண்ணப்ப படிவத்துடன் விண்ணப்பதாரிகள் தமது பிறப்புச் சான்றிதழ் பிரதி, க.பொ.த உயர்தர சான்றிதழ் பிரதி, க.பொ.த சாதாரணதர சான்றிதழ் பிரதி மற்றும் பெருந் தோட்ட துறை மேற்பார்வையாளரின் உறுதிப்படுத்தலோடு கூடிய தமது பெற்றோர் இறுதியாக பெற்ற சம்பள விபரம் ஆகியவற்றினை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்ப படிவத்தினை விண்ணப்பதாரிகள் இந்தியத் தூதரகம் கொழும்பின் இணையத்தளமான www.hcicolombo.gov.in என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாகப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகள் இந்திய உயர்ஸ்தானிகராலயம் கொழும்பு, அல 36-38, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியிலும், உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயம், இல 31, இராஜபில்ல மாவத்த, கண்டி ஆகிய முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை 27 டிசம்பர் 2019ம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு Honorary Secretary, CEWET c/o High Commission of India. P.O. Box 882, Colombo 03 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

****

கொழும்பு
2 டிசம்பர் 2019